## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) CREDAI YouthCon -1** எந்த நகரத்தில் நடத்தப்பட்டது?

**A]** அஹ்மதாபாத்

**B]** வாரணாசி

**C]** கல்கத்தா

**D] நியூ டெல்லி**

- ✓ பிப் 13ம் தேதி, பிரதமர் நரேந்திர மோடி, நியூ டெல்லி தல்கடோரா மைதானத்தில் 3000 இளம் ரியல் எஸ்டேட் டெவலப்பர்கள் முன்னிலையில், **CREDAI YouthCon-19**ல் உரையாற்றினார். 2 நாள் மாநாடு **Confederation of Real Estate Developers' Association of India (CREDAI)** ஆல் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ✓ இந்த மாநாடு அடுத்த தலைமுறை ரியல் எஸ்டேட் அடுக்கு மாடி கட்டுமானர்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் தங்கள் இளம் மனதில் இருக்கும் அறிவொளியை பகிர்ந்து கொள்ள வழி வகுக்கும். 1999 இல் நிறுவப்பட்ட **CREDAI** நிறுவனம் நாட்டில் 200 க்கும் மேற்பட்ட நகரங்களில் இருந்து ரியல் எஸ்டேட் டெவலப்பர்களை பிரதிபலிக்கும் உச்சநிறுவனம் ஆகும்.

**2) 2019 World Radio Day (WRD)**ன் கருப்பொருள் என்ன?

**A] Radio and Sports**

**B] Radio is You**

**C] Dialogue, Tolerance and Peace Broadcasts**

**D] Securing freedom of expression and journalists' safety**

- ✓ உலக வானொலி தினம் (**WRD**) ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 13 ம் தேதி கொண்டாடப்படுகிறது. வானொலி தகவல் மற்றும் பொழுதுபோக்குக்கான ஒரு மன்றமாகவும், தொலைதூர சமூகங்களுக்கான ஒரு பாலமாகவும், மக்களை மேம்படுத்த உதவும் கரமாகவும் செயல்படுகிறது.

- ✓ வானொலிகளின் தனித்துவமான சக்தியை நினைவில் வைத்துக்கொள்ளும் ஒரு நாள், உயிர்களைத் தொட்டு, உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ஒன்றாக மக்களை இணைக்கிறது. **UNESCO** வின் 36 வது பொதுக்குழு மாநாட்டில் நவ 3, 2011 அன்று இந்த நாள் அறிவிக்கப்பட்டது.
- ✓ 2019 கருப்பொருள் "**Dialogue, Tolerance and Peace Broadcasts"** ஆகும். இது மக்கள் குடியேறுதல், பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக உரையாடல் மற்றும் ஜனநாயக விவாதத்திற்கான ஒரு தளத்தை வழங்குகிறது. இவற்றை கேட்போர்கள் விழிப்புணர்வு மற்றும் நேர்மறையான நடவடிக்கைக்கு வழிவகுக்கும் புதிய முன்னோக்குகளை புரிந்துகொள்ள உதவுகிறது.

3) சமீபத்தில் இறந்த விஜயா பாபிநீடு, எந்த மொழி சினிமாவின் முக்கிய இயக்குநர் மற்றும் தயாரிப்பாளராக இருந்தார்?

**A]** மலையாளம்

**B]** ஒடியா

**C]** தமிழ்

**D]** தெலுங்கு

- ✓ தெலுங்கானாவைச் சேர்ந்த தெலுங்கு திரைப்பட இயக்குனர் தயாரிப்பாளர் விஜயா பாபினீடு (83), பிப்ரவரி 12, 2019 அன்று ஹைதராபாத்தில் காலமானார்.
- ✓ ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த இவர் கேங்க் லீடர், கிலாடி **No** 786 மற்றும் மகதீருடு போன்ற தெலுங்கு படங்களால் அறியப்பட்டார்.

4) சமீபத்தில் எந்த மாநில அரசு இந்திய மக்கள் முன்னணியை (**PFI)** தடை செய்தது?

**A]** ஜார்கண்ட்

**B]** தமிழ்நாடு

**C]** ஜம்மு காஷ்மீர்

**D]** அருணாச்சல பிரதேசம்

- ✓ ஜார்க்கண்ட் அரசாங்கம் சமீபத்தில் இந்திய மக்கள் முன்னணி (**PFI)** இயக்கத்தின் தேசவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், **ISIS** போன்ற பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு



winmeen.com

வைத்ததற்காகவும் அந்த இயக்கத்தை தடை செய்தது. அரசாங்க அறிவிப்பின் படி,1908 ஆம் ஆண்டின் குற்றவியல் சட்டம் (திருத்தம்),1908 சட்டத்தின் கீழ் **PFI** இயக்கத்தின் மீதான தடை அமல்படுத்தப்பட்டது.

- ✓ **PFI** தடைக்கான முடிவு அதன் நடவடிக்கைகள் மாநிலத்திற்கும், தேசத்திற்கும் ஆபத்தானது எனபதை உறுதி செய்த பின்னர் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயக்கம் அமைதி, இனவாத இணக்கம் மற்றும் மதச்சார்பற்ற கட்டமைப்பு இவற்றை இடையூறு செய்யும்படி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ அறிவிப்பு படி, **PFI** இயக்கம் சமூகப் பிரிவு, இந்தியாவுக்கு எதிரான மற்றும் பாக்கிஸ்தான் சார்பு முழக்கங்கள், **ISIS** மற்றும் **JMB** உடன் தொடர்புகளை பரப்புவதில் ஈடுபட்டுள்ளது. **PFI, 2006** ல் தேசிய அபிவிருத்தி முன்னணி(**NDF**) -க்கு அடுத்தபடியாக உருவாக்கப்பட்ட ஒரு தீவிரவாத மற்றும் போர்க்குணமிக்க இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு ஆகும்.

**5) 'Exercise Topchi 2019'**-ஐ நடத்திய துறை எது?

**A]** இந்திய விமானப்படை

**B]** இந்திய இராணுவம்

**C]** இந்திய கப்பற்படை

**D]** இந்திய கடலோர காவல்படை

- ✓ இந்திய இராணுவம் சமீபத்தில் அதிரடி லைட் ஹெலிகாப்டர்கள் மற்றும் சுதேச ஆயுதம்-ராடார்-இடவசதியை பயன்படுத்தி அதன் பீரங்கி படைபலத்தை வெளிப்படுத்தியது. இப்பயிற்சி மகாராஷ்டிரா மாநிலத்தின் நாசிக் நகரம் அருகேயுள்ள டியோலாலி முகாமில் '**Exercise Topchi 2019**' என்ற பெயரில் நடந்தது.
- ✓ விமான போக்குவரத்து மற்றும் கண்காணிப்பு திறன்களும் இப்பயிற்சியில் காட்சிபடுத்தப்பட்டன. துப்பாக்கி தாக்குதலுடன் கூடுதலாக ராக்கெட்டுகள், ஏவுகணைகள், கண்காணிப்பு மற்றும் இலக்கு கொள்முதல் ராடர்களின் காட்சி, தொலைதூர விமானம் மற்றும் உயர்ந்த தொழில்நுட்பம் கூடிய உபகரணங்கள் வியத்தகு - உற்சாகமூட்டுவதாக இருந்தது.

**6)** முதல் **LAWASIA** மனித உரிமைகள் மாநாடு - 2019 நடந்த இடம் எது?

**A]** நியூ டெல்லி

**B]** ராஞ்சி

**C]** ஜெய்ப்பூர்

**D]** புனே

- ✓ பிப்.9 அன்று முதல் **LAWASIA** மனித உரிமை மாநாடு நியூ டெல்லியில் “**State Power, Business and Human Rights: Contemporary Challenges**” என்ற கருப்பொருளுடன் நடைபெற்றது. 2 நாள் மாநாடு இந்தியாவின் பார் அசோசியேஷன் (**BAI**) உடன் இணைந்து **LAWASIA** ஆல் நடத்தப்பட்டது.
- ✓ “**Gender, Sexuality and Human Rights**” இலிருந்து “**Climate Change, Water Conflicts and Human Rights**” வரை பல்வேறு தலைப்புகள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.
- ✓ **LAWASIA** என்பது வக்கீல்கள், நீதிபதிகள் மற்றும் சட்ட அமைப்புகளின் ஒரு பிராந்திய சங்கமாகும், இது ஆசிய பசிபிக்கின் நலன்களுக்கும் அக்கறைகளுக்கும் வக்காலத்து அளிக்கிறது.

7) கடல் மாசுபாட்டை தடுக்க இந்தியா சமீபத்தில் எந்த நாட்டுடன் கைகோர்த்தது?

**A]** ஐஸ்லாந்து

**B]** நார்வே

**C]** பிரான்ஸ்

**D]** ஜப்பான்

- ✓ மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் சமீபத்தில் நார்வே அரசாங்கத்துடன் இந்தியா-நார்வே கடல் மாசுபாடு குறைப்பு திட்டத்தை துவங்கியது.
- ✓ இரு நாடுகளும் அனுபவங்கள் மற்றும் திறமைகளை பகிர்ந்துகொள்வதோடு, சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சமுத்திரங்களை வளர்ப்பதற்கான முயற்சிகளுக்கும், கடல் பொருளாதாரத்தில் கடல் வளங்களின் நிலையான பயன்பாட்டுக்கும் ஒத்துழைக்கின்றன.
- ✓ இரண்டு அரசாங்கங்களின் முதல் கூட்டு முயற்சியானது வேகமாக வளர்ந்துவரும் சுற்றுச்சூழல் கவலையான கடல் மாசுபாட்டை எதிர்த்து போராடும்.
- ✓ இத்திட்டம் உள்ளூர் அரசாங்கங்களுக்கு நிலையான கழிவு மேலாண்மை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு முறைகளை உருவாக்குவதற்கும் உதவும்.
- ✓ இந்திய மற்றும் நார்வே அரசுகள் கடற்கரை சுத்திகரிப்பு முயற்சிகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், சிமெண்ட் உற்பத்தியில் நிலக்கரி எரிபொருளை மாற்றுதல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி பைலட் திட்டத்தை நோக்கி செயல்படும்.

8) 2019 தேசிய உற்பத்தித்திறன் வாரத்தின் (**NPW**) கருப்பொருள் என்ன?

A] Circular Economy for Productivity & Sustainability

B] Industry 4.0 Leapfrog Opportunity for India

C] From waste to profits-through reduce, recycle and reuse

D] Ease of Doing Business for higher productivity

- ✓ **National Productivity Council (NPC),** பிப்ரவரி 12 ஆம் தேதி, அதன் 61 வது ஆண்டு துவக்கதினத்தை கொண்டாடியது. **NPC** நிறுவப்பட்ட தினத்தை **National Productivity Day (NPD)** ஆகவும், அந்த வாரத்தை பிப்.12-பிப்18 ஐ **National Productivity Week (NPW)** ஆகவும் **"Circular Economy for Productivity & Sustainability"** என்ற கருப்பொருளுடன் கொண்டாடுகிறது.
- ✓ 2019 கருப்பொருள் வட்ட வணிக மாதிரியை பயன்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை பிரதிபலிக்கிறது. இது நீண்ட கால பொருளாதார வாய்ப்புக்கள் மற்றும் பொருட்களின் மீளுருவாக்கம் ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்கிறது.
- ✓ சுற்றுச்சூழல் பொருளாதாரம், வரையறுக்கப்பட்ட பங்குகளை கட்டுப்படுத்துவதன் மூலம் இயற்கை மூலதனத்தின் பாதுகாப்பு மற்றும் விரிவாக்கத்தின் கொள்கையை பின்பற்றுகிறது.
- ✓ கார்பன் உமிழ்வை குறைப்பது, மதிப்புமிக்க மூலப்பொருட்களை காப்பதோடு உற்பத்தி திறனை அதிகரித்து அதன் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் சாத்தியம் உள்ளது.

9) தொழில் முனைவோருக்கான ஆன்லைன் கிளீனிங் முறைமையை சமீபத்தில் அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?

A] கேரளா

B] அசாம்

C] உத்திரபிரதேசம்

D] ராஜஸ்தான்

- ✓ **ASCENT** கேரளா 2019 விழாவில் கேரள முதல்வர் பினராயி விஜயன் **K-SWIFT (Kerala Single-window Interface for Fast, Transparent Clearances)** தளத்தை தொடங்கி வைத்தார். ஆன்லைன் கிளீனிங் பொறிமுறையின் நோக்கம், மாநிலத்தை ஒரு உயர் முதலீட்டு தளமாக உருவாக்குவதும், தொழில்முனைவோர் தங்கள் நிறுவனங்களை சிறந்த முறையில் தொடங்குவதும் ஆகும்.

- ✓ **K-SWIFT** ஆனது, மாநிலத்தில் நிறுவனங்களை துவக்குவதற்கு துறைகள் / ஏஜென்சிகளிடமிருந்து அனுமதிகளை எளிமையாக்குவதற்கும், துரிதப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

10) 2018 ஆம் ஆண்டின் **EY** தொழில் முனைவோர் விருது பெற்றவர் யார்?

**A]** சத்தியநாராயண சவா

**B]** சித்தார்த்தா லால்

**C]** கரண் பகத்

**D]** கிஷோர் பியானி

- ✓ **Eicher Motors Ltd** இன் **MD & CEO** சித்தார்த்தா லால் 20 வது **EOY** விருதுகள் பதிப்பில் 2018 ஆம் ஆண்டின் சிறந்த **EY** தொழில் முனைவோர் விருது பெற்றுள்ளார். இவர் நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் நிதி திருப்புமுனையை மாற்றியதற்கும், ராயல் என்ஃபீல்ட் வர்த்தகத்தை புத்துயிரூட்டியதற்கும் அங்கீகாரம் பெற்றார்.
- ✓ சித்தார்த்தா லால், ஜீன்6-8,2019 ல் மொனாக்கோ நாட்டின் மோன்டே கார்லோவில் நடக்கவிருக்கும் **World Entrepreneur of the Year Award(WEOY)** விழாவில் இந்தியா சாய்பாக கலந்துகொள்வார். ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் கொண்ட தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தும் வகையில் தொழில் முனைவோர் ஆண்டு விருதுகள் நடத்தப்படுகிறது.
- ✓ மேலும், **Wipro** குழு தலைவர் அசிம் பிரேம்ஜி வாழ்நாள் சாதனையாளர் விருதை வென்றார். இவர் **Wipro** வை ஒரு காய்கறி எண்ணெய் வியாபாரத்திலிருந்து பல வணிகத் தொழில் நுட்ப நிறுவனமாக மாற்றியதோடு, இந்திய தகவல் தொழில்நுட்பத்தை உலக அரங்கில் உயர்த்த முக்கிய பங்காற்றியவர் ஆவார்.

winmeen.com